
### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் இந்தியாவின் அறிவுசார் எதிர்காலத்தை வடிவமைப்பதில்

# தமிழ்நாடு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது!

## தொழில் வழிகாட்டி நிறுவனம் தகவல்!




சென்னை, டிச. 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளுடன் கூடிய கடுமையான உழைப்புகளின் பயனாக வெற்றி மேல் வெற்றி காண்கிறது தமிழ்நாடு! தொழில் வழிகாட்டி நிறுவன அறிவிப்பின்படி இந்தியாவின் அறிவுசார் எதிர்காலத்தை வடிவமைக்கும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைகளுடன் கூடிய கடுமையான உழைப்புகளின் பயனாகத் தமிழ்நாடு 2021 ஆம் ஆண்டு தொடங்கி அபரிமிதமான முன்னேற்றங்களைப்படைத்து இந்தியாவின் மிகச்சிறந்த மாநிலமாக எழுச்சி பெற்றுள்ளது.

அண்மைச் சில நாள்களுக்கு முன் ஒன்றிய அரசின் இந்திய ரிசர்வ் வங்கி இந்திய மாநிலங்களின் வளர்ச்சி நிலைகள் குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டு உள்நாட்டு உற்பத்திகளில் (GSDP) தமிழ்நாடு 16 சதவீதம் பெற்று இந்தியாவில் உச்சம்



கண்டுள்ளது எனப் புதிய சாதனையை வெளிப்படுத்தியது.

**புதிய சாதனை படைத்துள்ளது!**

அதனை தொடர்ந்து, 18.12.2025 அன்று தொழில் வழிகாட்டி நிறுவனம் வெளியிட்டுள்ள இந்திய காப்புரிமைப் பதிவுகளில் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது; மற்ற மாநிலங்களை விட மிக பெரிய இடைவெளியுடன் 23 சதவீதம் வளர்ச்சிகண்டு புதிய சாதனை படைக்கப் பட்டுள்ளது என்னும் விவரம் தெரியவந்துள்ளது.

அதாவது, இந்தியாவில் காப்புரிமை (Patents) தாக்கல் செய்வதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்து, நாட்டின் அறிவுசார் தலைநகராகத் தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்திய அளவில் பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொத்தம் (68,201), காப்புரிமைகளில் தமிழ்நாடு மட்டுமே 15,440 காப்புரிமைகளைப் பதிவு செய்துள்ளது. இது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 23 சதவீதம் ஆகும். இப்படி, காப்புரிமை பெறுவதில் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாடு மிகப்பெரிய இடைவெளியில் முன்னிலை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வளர்ச்சி விகிதம்:**

முந்தைய 2023-2024 ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில், 2024-2025 ஆம் நிதியாண்டில் காப்புரிமை தாக்கல் செய்வது 9,565லிருந்து 15,440 ஆக உயர்ந்துள்ளது. இந்த 62 சதவீதம் வளர்ச்சி, மாநிலத்தில் உள்நாட்டுக் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் அதிவேகமாக விரைவுபடுத்தப்பட்டு வருவதைப் பிரதிபலிக்கிறது.

தமிழ்நாட்டின் ஆழமான ஆராய்ச்சித் தளம், வலுவான தொழில்முறை வலிமை, கல்வி நிறுவனங்களுக்கும் தொழில் துறையினருக்கும் இடையே நிலவும் நெருக்கமான ஒருங்கிணைந்த சூழல் (Academia-Industry Ecosystem) ஆகியவை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைக்கு இவை முக்கியக் காரணங்களாக அமைந்துள்ளன.

இந்தத் தொடர் வளர்ச்சியின் மூலம், இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமை மற்றும் கண்டுபிடிப்புத் துறையில் தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

### சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் – தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# ‘சொல் புதிது’ திட்டத்தின் எட்டாவது கூட்டம்!

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் – முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 21-

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வழங்கிய நிதி உதவியில் செயற்படும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது திட்டத்தின் எட்டாவது கூட்டம் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், மு. இராமசாமி, ஒப்பிலா மதிவாணன்,

பாரதிபாலன், சா. சரவணன், ம. இளங்கோவன், பூண்டிக் கல்லூரி முன்னாள் முதல்வர் உரு.இராசேந்திரன், மற்றும் திருமதி வாசுகி கண்ணப்பன், நீரை மகேந்திரன், ராஜ் கண்ணன், மு. முருகேசன், ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பின்வரும் 32 ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் இறுதி செய்யப் பெற்றன.

ஆங்கிலம் , இறுதி செய்யப்பட்டவை விவரம் வருமாறு:-

*Life writing* - வாழ்வெழுத்து, *Poop suitcase* - மனிதக் கழிவுப் பெட்டி, *Fibonacci day* - ஃபிபோனஸ்ஸி நாள், *Culpable homicide* - நோக்கமிலாக் கொலை, *Rage bait* - கெடு உணர்வுத் தூண்டி, *Reps* - மீள் பயிற்சி, *Microgreens* - நுண்ணுயிர்ப் பயிர், *Quandary* - ஊசலாட்டம், *Conundrum* - பெருஞ்சிக்கல், *Strong room* - காப்பறை, *Collogen* - தசை வலுவூட்டி / தசை நார் வலுவூட்டி, *Match fixing* - ஆட்டச் சூது, *Sky ball* - மீவுயர் பந்து, *Skyfall* - பெருவீழ்ச்சி, *Yorker* - குறி வீச்சுப் பந்து, *Abnegation* - தன்னல நீக்கம், *Athleisure* - விளையாட்டுப் பாணி உடை, *Facetious* - பொருந்தா நகை, *Iconoclast* - கலகக்காரர், *Physical flashcard* - விளக்க அச்சு அட்டை, *Digital flashcard* - விளக்க மின் அட்டை, *Gigil* - பேருணர்வு, *Alamak* - ஐயோ, *Yoh* - ஓ, *Ludraman* - மட்டி, *Tumbleweed* மரக் கட்டை, *Hidden gem* - மறைமணி, *Dowdy* - ஈர்ப்பற்ற, *Kidult* - முதுகுழவி, *Hangxiety* - போதைப் பின்பதற்றம், *Promptcraft* - கட்டளைத் திறன், *Situationship* - உறவு மயக்கம்

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

---



## தி.மு.க.
## இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

### மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21.12.2025 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.12.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---




தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்கத் தயாராகிறது

முரசொலி

பொங்கல் மலர்
2026

ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...

விலை ரூ.150/-

